Registered as a news paper. பக்கங்கள்: எட்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 | வைகாசி 07 | ஹிஜ்ரி 1427 | ற.ஆகிர் 22 | (21.05.2006) | ஞாயிற்றுக்கிழமை | இதழ் 233

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# தமிழகம் சென்ற பத்து அகதிகள் படகு விபத்தில் பரிதாப மரணம்!

இராமேஸ்வரம் —

மன்னாரில் இருந்து 19 அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பத்துப் பேர் உயிரிழந்ததாக தமிழகத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் பிற்பகல் மன்னார் - பேசாலையில் இருந்து புறப்பட்ட கண்ணாடி இழைப்படகு கடும் காற்றினால் நடுக் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

நள்ளிரவு நேரிட்ட இந்த விபத்துக் குறித்து எவருக்கும் தெரிய வராத நிலையில் - இந்தப் படகில் சென்ற ஒன்பது பேர் மட்டுமே நீந்திச் சென்று சிறிய தீவு ஒன்றில் கரை சேர்ந்தனர்.

அவர்களை இந்தியக் கடற்படை மீட்டதை அடுத்தே படகு விபத்துக் குறித்த தகவல் வெளியானது.தாம் 19 பேர் ஒரு படகில் வந்ததாகவும், எஞ்சியோர் காணாமல் போய் விட்டதாகவும் தப்பி வந்த ஒருவர் தெரிவித்தார்.

இந்த விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்ததாக இந்திய கடற்படை அதிகாரிகள் உறுதிப் படுத்தினர். நிவாஷினி கந்தசாமி (வயது 21),

(08 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவில் - முகமாலையில் படையினர் தொடர்ந்து தாக்குதல்!

யாழ்ப்பாணம் —


நாகர்கோவில், முகமாலை முன் னரங்க நிலைப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவும், நேற்றுக்காலையும் தொடர் ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணி முதல் நேற்று அதிகாலை 3 மணி வரை - பளைப் பகுதியை இலகுவைத்து படையினர் 81 மில்லிமீற்றர் மோட்டார் தாக்குதல்களையும், ஆட்லறி தாக்குதல்களையும் நடத்தினர். இதன் காரணமாக பொதுமக்கள் இடம்பெயர்ந்து சென்றனர்.

அதேவேளை, நேற்றுக்காலை (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றிய தடை முயற்சி இறுதித் தீர்வுக்கு பாரிய தடை!

### அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு



லண்டன் —

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தேச தடைமுயற்சி தமிழ் மக்களின் பிரச்சினைகளின் இறுதித் தீர்வை எட்டுவதற்கு பாரிய தடையை ஏற்படுத்தும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளை தடை செய்வது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டு வரும் தீவிர பரிசீலனைகள் மற்றும் அவை தொடர்பான உத் தேச தீர்மானங்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அன்ரன்பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகள் மீதான (08 ஆம் பக்கம் பார்க்க)


## அல்லைப்பிட்டி கிராமத்திலிருந்து 97 குடும்பங்கள் இடம்பெயர்வு!

யாழ்ப்பாணம் —

தீவகத்தில் அப்பாவி மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலை அடுத்து அல்லைப்பிட்டியில் இருந்து 97குடும்பங்கள் நேற்று தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர்.

கடந்த சனிக்கிழமை இரவு அல்லைப்பிட்டி, புளியன் ஆகிய பகுதிகளில் நான்கு மாதக்குழந்தைகள் உட்பட 13 பேர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் அந்தப் பகுதி மக்கள் அங்கிருப்பதற்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் மற்றும் மூன்று தினங்களுக்குள் அங்கிருந்து வெளியேறுமாறு கோரி ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளால் பீதியடைந்த

(08 ஆம் பக்கம் பார்க்க)



# ஐரோப்பா தடைசெய்ய தீர்மானித்தால் சமாதான முயற்சிகள் பாதிப்படையும்!

## சொல்ஹெய்ம், ஹென்றிக்சன் கவலை

கொழும்பு —

விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய நாடாளுமன்றம் கொண்டுவந்திருக்கும் தடை விதிப்பதான தீர்மானம் குறித்து நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரம், இலங்கையின் சமாதான முயற்சிகளுக்குப் பொறுப்பானவருமான எரிக் சொல்கெய்மும், இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் உல்ப் ஹென்றிக்சனும் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தத் தீர்மனமானது எதிர் விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதும், சாமாதானப் பேச்சுக்களைப் பாதிக்கக்கூடியதுமாகும் என சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடை காரணமாக அவர்களுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபடுகின்ற நாமும் தனிமைப்பட (08 ஆம் பக்கம் பார்க்க)

# கடல் கண்காணிப்பு அரசு பரிசீலனை!

கொழும்பு —

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் கடல் கண்காணிப்பு தொடர்பான புதிய நிபந்தனைகளை அரசும், விடுதலைப் புலிகளும் ஆராய்ந்து வருகின்றனர் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் கடல் கண்காணிப்பு பணியில் இருந்து விலகிய பின்னர் கடல் கண்காணிப்பு தொடர்பாக அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினரிடமும் கடல் காண்காணிப்பு தொடர்பாக புதிய நிபந்தனைகளை கண்காணிப்புக் (08 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதக்குழுவுக்கு அரசு உதவி; அமெரிக்க அரசாங்கம் கவலை

வொஷிங்ரன் —

கருணாகுழு உட்பட சில ஆயுதக்குழுக்களுக்கு அரசாங்கம் ஆதரவளித்துவருவது குறித்து அமெரிக்க அரசாங்கம் கவலை தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான உதவி ராஜாங்க அமைச்சர் ரிச்சார்ட் பௌச்சரை ஜனாதிபதியின் விசேட தூதுவரும், திட்டமிடல் விரிவாக்கல் அமைச்சின் செயலாளருமான அஜித் நிவாட் கப்ரல் சந்தித்துப் பேசினார்.

இந்த மாதம் 30 ஆம் திகதி ரோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைகளின் சந்திப்பில் இலங்கை அரசாங்கத்துக்குச் சார்பான சில நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும் என இணைத் தலைமைகளைக்கோரும் நோக்கிலேயே கப்ரல் அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் சார்பில் இணைத்தலைமை நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ள உதவி ராஜாங்க அமைச்சர் ரிச்சார்ட் பௌச்சரை நேற்றுமுன்தினம் கப்ரல் தலைமையிலான (08 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவுகள்!

கொழும்பு —

ஒத்திவைக்கப்பட்ட 20 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நேற்று 854 வாக்களிப்பு நிலையங்களில் நடைபெற்றது. இந்த வாக்களிப்பு 121 நிலையங்களில் நேற்று மாலை ஆரம்பானது.

4 மாநகர சபைகள், 3 நகரசபைகள் மற்றும் 13 பிரதேச சபைகளுக்குமென நடைபெற்ற இந்த தேர்தல் மூலம் 312 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவிருக்கின்றார்கள். அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் சார்பாக 2768 பேர் தேர்தலில் போட்டியிட்டனர்.

தேர்தல் திணைக்கள அதிகாரின் தகவல்களின்படி மொத்த வாக்காளர்களில் 60 முதல் 75 சதவீதமானோர் வாக்குகளைப் பதிவு செய்துள்ளதாக தெரியவருகிறது. குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற காத்தான்குடி நகரசபை மற்றும் 2 பிரதேச சபைகளுக்கான தேர் தல்களில் 70 சதவீதமானோர் வாக்களித்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மாநகரசபை மற்றும் 5 பிரதேச சபைகளுக்குமான தேர்தல்களில் 75 சதவீதமானோர் வாக்களித்துள்ளதாக தேர்தல திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

### காலி மாவட்டம்

| காலி மாநகரசபை | | | |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 18876 | 51.33% | 11 |
| ஐ.தே.க | 14524 | 39.50% | 7 |
| ஜே.வி.பி. | 2416 | 6.57% | 1 |
| சுயேட்சை 2 | 3 | 0.01% | 0 |
| சுயேட்சை 3 | 10 | 0.03% | 0 |
| ஹெல உறுமய | 353 | 0.96% | 0 |
| சுயேட்சை 1 | 591 | 1.61% | 0 |
| செல்லுபடியான வாக்குகள் | | 36773 | |
| பதிவுசெய்யப்ப[illegible] வாக்குகள் | | 37996 | |
| நிராகரிக்கப்பட்டவை | | 1223 | |
| மொத்த வாக்குகள் | | 62485 | |

### கம்பஹா மாவட்டம்

| கம்பஹா மாநகரசபை | | | |
|---|---|---|---|
| ஐ.தே.க | 10565 | 42.21% | 9 |
| ஜே.வி.பி | 6121 | 24.46% | 4 |
| லிபரல் கட்சி | 7084 | 28.30% | 4 |
| ஹெ.உறுமய | 986 | 3.94% | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | | 25029 | |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | | 25924 | |
| நிராகரிக்கப்பட்டவை | | 895 | |
| மொத்த வாக்குகள் | | 43048 | |

(08 ஆம் பக்கம் பார்க்க)

# தென்னாபிரிக்க அணியின் சிறந்த வீரர் விருதை வென்றார் மக்காயா என்ரினி



ஜொஹனஸ் பேர்க்—

தென்னாபிரிக்க அணியின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதை தொடர்ந்து 2ஆவது ஆண்டாக வென்றிருக்கிறார். மக்காயா என்ரினி.

தென்னாபிரிக்காவில் ஆண்டு தோறும் சிறப்பாகச் செயற்படும் கிரிக்கெட் வீரர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான விருதுவழங்கும் விழா ஜொஹனஸ்பேர்க் நகரில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதை வேகப்பந்து வீச்சாளரான மக்காயா என்ரினி வென்றார். ஏற்கனவே கடந்த ஆண்டும் இந்த விருதை இவர் வென்றுள்ளார். சமீபத்தில் சொந்த மண்ணில் நடைபெற்ற அவுஸ்ரேலிய, நியூசிலாந்து தொடர்களில் என்ரினி சிறப்பாக செயற்பட்டதன் மூலம் இந்த விருது வழங்கப்பட்டதாக தேர்வுக்குழு அறிவித்துள்ளது.

இது தவிர சிறந்த டெஸ்ட் வீரருக்கான விருதையும் இவர் தட்டிச்சென்றார். சர்வதேச கிரிக்கெட் சபையின் தரவரிசைப் பட்டியலில் முதலிடம் வகிக்கும் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் ஷோன் பொலக் சிறந்த ஒருநாள் போட்டி வீரர் விருதை வென்றார்.

அதிக ரசிகர்களை கவர்ந்த வீரருக்கான விருதை டி வில்லியர்ஸ் பெற்றார்.

# ஒருநாள் போட்டிகளில் ராவிட்டே தொடக்க வீரராக களமிறங்குவார்



கிங்ஸ்டன்—

ஒருநாள் போட்டியில் ராவிட் தொடர்ந்து தொடக்க வீரராகவே ஆடுவார் என்று இந்திய அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பல் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது -

தொடக்க வீரர் வரிசையில் ராவிட்டினது ஆட்டத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. தொடக்க வீரராக ஆடுவதில் அவர் சந்தோசப்படுகிறார்.

தொடக்க வீரராக ஆடுபவர் - சதம் அடித்தால் அணி வெற்றி பெறமுடியும். தொடக்க வரிசை சரிவு இருந்ததால் ராவிட்டே இனி ஆரம்ப துடுப்பாட்ட வீரராக கள மிறங்குவார். முகமட் கைவ் அனுபவம் வாய்ந்த வீரர். கடந்த சில மாதங்களாக அவரது ஆட்டம் மோசமாக இருந்தது.

ஆனால் அவருக்குத் தொடர்ந்து வாய்ப்பு வழங்கப்பட்டது. இதை அவர் சரியாகப் பயன்படுத்திக்கொண்டார். உலகக் கிண்ணத்தைக் கருத்திற்கொண்டு சிறந்த அணி உருவாக்கப்பட்டுவருகிறது. காயமடைந்த சிறிசாந்த், ரமேஷ் பவார் குணமடைந்து வருகிறார்கள். இவ்வாறு சப்பல் கூறினார்.

## விளையாட்டு

# 6 ஆவது தடவையாக பிரேசில் அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றுமா?




லண்டன்—

அடுத்த மாதம் 9 ஆம் திகதிமுதல், ஜூலை 9 ஆம் திகதிவரை ஜேர்மனியில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பிரேசில் அணி 6 ஆவது முறையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றுமா என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

பிரேசில் 1958, 1962, 1970, 1994 2002 ஆண்டுகளில் உலகக் கிண்ணத்தை வென்றிருந்தது. இந்த முறை உலகக்கிண்ணப் போட்டியில் பிரேசில் அணி எப் பிரிவில் இடம் பெற்றுள்ளது. அந்தப் பிரிவில் இடம் பெற்றுள்ள மற்ற அணிகள் ஜப்பான், குரோஷியா, அவுஸ்ரேலியா ஆகும்.

இதில் ஜப்பான், குரோஷியா அணிகள் பிரேசிலுக்கு சவாலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆசியாவில் முன்னணி அணியாக ஜப்பான் உலக அளவில் 18 ஆவது இடத்தில் உள்ளது.

பிரேசில் அணி 13 ஆம் திகதி குரோஷியாவுடனும், 18 ஆம் திகதி அவுஸ்ரேலியாவுடனும், 22 ஆம் திகதி ஜப்பானுடனும் மோதுகின்றது. பிரேசிலின் சம்பியன் வாய்ப்பைத் தடுக்கும் நிலையில் ஆர்ஜென்ரீனா, ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி ஆகிய அணிகள் திகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரேசில் அணியில் றொனால்டோ, காபு, றொனால்டினோ, ரோபினோ போன்ற முன்னணி வீரர்கள் உள்ளனர். கடந்த உலகக்கிண்ணப் போட்டியில் றொனால்டோ ஜொலித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் உத்தேச அணியில் சொகைப் அக்தர் இடம்பிடித்தார்



கராச்சி—

முழங்கால் காயம் குணமான நிலையில் இங்கிலாந்து தொடருக்கான பாகிஸ்தானின் உத்தேச அணியில் இடம்பிடித்துள்ளார் சொகைப் அக்தர். பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மூன்றரை மாத சுற்றுப்பயணமாக இங்கிலாந்து செல்லவுள்ளது.

அங்கு நான்கு டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் ஜூலை 13 ஆம் திகதி லோட்ஸில் ஆரம்பமாகிறது. இதற்கான 21 பேர்கொண்ட உத்தேச அணியை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடந்த வியாழக்கிழமை அறிவித்தது.

இதில் முழங்கால் காயம் குணமான, அதிவேகப் பந்துவீச்சாளர் சொகைப் அக்தர் இடம்பெற்றுள்ளார். அக்தர் இதுவரை டெஸ்ட் போட்டிகளில் 165 விக்கெட்டுகளையும், ஒருநாள் போட்டிகளில் 190 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார்.

சமீபகாலமாக போட்டிகளில் பங்கேற்காமல் இருந்த இவர், லாகூரில் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடங்கும் பயிற்சி முகாமில் தனது உடற் தகுதியை நிரூபிக்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளார். இதில் தேறினாலேயே இங்கிலாந்து தொடரில் அக்தர் விளையாடலாம்.

சல்மான் பட், இம்ரான் பர்கத், தௌபிக் உமர், யுனிஸ் கான், முகமட் யூசப், இன்சமாம், பைசல் இக்பால், ஆசிம் கமால், பஷித்கான், கம்ரான் அக்மல், ஹைதர், அப்ரிடி, அப்துல் ரசாக், சொகைப் மலிக், கனேரியா, அக்தர், முகமட் சமீன், நவீஸ்ட் உல் ஹசன், முகமட் ஆசிப், உமர் குல், இப்திகார் அஞ்சும்.

நிறைஞ்சனாஸ் சங்கானை

S.J.சூர்யா
நயன்தாரா
நடித்த



கள்வனின் காதலி

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த

மூன்றாவது வெற்றி வாரம்

திருப்பதி



காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

# தேசிய அடையாள அட்டை கிடைக்காத கிளிநொச்சி பாடசாலை அதிபர்களுக்கு!

கிளிநொச்சி—

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து இதுவரை அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளாத கீழ்வரும் பாடசாலை அதிபர்கள் இன்று நண்பகல் 12 மணிக்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்குவந்து உயர்தர வகுப்பு மாணவர்களின் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறு அரச அதிபர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

பூநகரி மகாவித்தியாலயம், கிளிநொச்சி மகாவித்தியாலயம், கிளிநொச்சி இந்துக்கல்லூரி, முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயம், கிளிநொச்சி மத்திய கல்லூரி , கனகபுரம் மகாவித்தியாலயம், வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம் , அக்கராயன்குளம் மகாவித்தியாலயம், புனித திரேசா மகளிர் கல்லூரி, பளை மத்திய கல்லூரி, முழங்காவில் மகாவித்தியாலயம், தர்மபுரம் மகாவித்தியாலயம்.

ஆகிய பாடசாலை அதிபர்களையே பாடசாலை மாணவர்களின் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய அறிவித்தல்

எங்களிடம் மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்த வாடிக்கையாளர்கள் உடனடியாக புத்தகப் பதிவினை மேற்கொள்ளவும், அல்லது புத்தகப் பதிவுக்கான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளவும். தவறும் பட்சத்தில் பின்விளைவுகளுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதை அறியத்தருகின்றோம். [C/4474]

நிர்வாகி,
சிவகுரு உந்துருளி வாணிபம்,
பரந்தன்.

சிறு விளம்பரம்

தவறிவிட்டது

வளலாய் அச்சுவேலியைச் சேர்ந்த குலேந்திரராசா வாசகன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை நேற்றைய தினம் (20.05.2006) யாழ்ப்பாணத்துக்கும் - கொடிகாமத்துக்கும் இடையில் ஏ9 வீதி வழியே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கவும். அல்லது -

தொடர்பு :- 0776 296999 C/5355

காப்புறுதி சேவையில் 05 ஆவது அகவையில் தடம் பதிக்கும்

வரையறுக்கப்பட்ட செலிங்கோ காப்புறுதி (பொது) கம்பனி

Ceylinco Insurance Company Limited

இலங்கையில் மட்டுமல்லாமல், ஆசிய நாடுகளிலும் காப்புறுதி சேவையில் முன்னோடியும், முதன்மையுமான செலிங்கோ காப்புறுதி (பொது) யாழ்.குடாநாட்டில் தனது 05 ஆவது அகவையில் தடம் பதிக்கின்றது. இதற்கு உறுதுணையும், ஆதரவும் வழங்கிய வாடிக்கையாளர்கள், வங்கியாளர்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது ON THE SPOT சேவைகள் :

- VIP ON THE SPOT (வாகன காப்புறுதி 0112393939)
- MARINE ON THE SPOT (கப்பற் பொதி காப்புறுதி 0114706706)
- SUWA SAMPATHA ON THE SPOT (மருத்துவ காப்புறுதி 0112399199)
- CHP + ON THE SPOT (சிறுவர் நலக் காப்புறுதி 0112399199)

எமது கிளைகள் :

பிரதான கிளை - 173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 - 222 6257, 021 - 4590909

உப கிளைகள்:
1. 145, K.K.S வீதி, சுன்னாகம். 021 - 222 7959
2. 36, பிரதான வீதி, நெல்லியடி. 021 - 226 4578
3. 09, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி. 0777 178249

முகாமையாளர்

[C/5328]

# இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அரச கூட்டணியின் நிலைப்பாடு என்ன?



## ரவி கருணாநாயக்க கேள்வி

கொழும்பு —

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அரசாங்கம் ஜே.வி.பி மற்றும் ஹெலஉறுமய ஆகியன தமது நிலைப்பாட்டை வெளியிட வேண்டுமென ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையில் தீர்வு காண்பதற்கு ஜே.வி.பி இனங்கியுள்ளதாக வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் இந்தியா சென்றபோது கூறியிருந்தார். ஆனால், நான்காவது ஈழப்போருக்கு எதிராக ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளாரென ஜே.வி.பி கூறுகிறது. ஆகவே இதன் உண்மை நிலை என்ன?

நான்காம் கட்ட ஈழப் போருக்கு எதிராக ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக ஜே.வி.பி கூறுகிறது. ஆனால், சமாதான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா எங்களிடம் கோருகிறார்.

மறுபக்கம் நாட்டில் யுத்த பீதி ஏற்பட்டுள்ளது. உண்மையில் நாட்டில் நடப்பது என்ன எனத் தெரியாமல் மக்கள் குழப்பத்தில் உள்ளனர்.

தற்போது பொருளாதார யுத்தமும் நாட்டில் ஏற்பட்டுள்ளது. முதலீட்டாளர்கள் திரும்பிச் சென்றுள்ளனர். மின்சார சபையைத் தனியார் மயப்படுத்துவதற்கு அரசாங்கமும் முயற்சி செய்து வருகிறது. இதனால் மின்சாரசபை ஊழியர்கள் வேலை நிறுத்தத்துக்குத் தயாராகி வருகின்றனர். இதனால் நாட்டில் இருள் சூழும் அபாயம் ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரிட்டிஷ் கடற்படைத்தளபதி வருகை !

கொழும்பு —

பிரிட்டனின் கடற்படைத்தளபதி ஜொனதன் பான்ட் ஜூன் மாதம் 3 ஆம் திகதி உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வரவுள்ளார்.

அண்மைக்கால வரலாற்றில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் பிரிட்டனின் உயர் படைஅதிகாரி இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தனது விஜயத்தின் போது படை அதிகாரிகளுடன் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் கடற்படை தரப்பில் நல்லுறவைக் கட்டியெழுப்புவது குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (தே)

# பேச்சுக்கான சூழலை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம்

## நோர்வே தூதரகப் பேச்சாளர்

கொழும்பு —

வட-கிழக்கு மாகாணத்தில் வன்செயல்கள் இடம்பெற்று வருவதால் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்தக் கூடிய சூழ்நிலை இல்லையென விடுதலைப் புலிகள் கூறுகின்ற போதும் பேச்சுவார்த்தை குறித்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

அரசுடனும், விடுதலைப் புலிகளுடனும் தாம் தொடர்ந்து பேச்சுக்களை நடத்திவருவதாகவும் நோர்வே தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அரசும், விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமென இருதரப்பினரையும் வலியுறுத்தி வருகிறோம். ஆனால், அதற்கான இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டியது சம்மந்தப்பட்ட இரு தரப்பினருமேயாவார்.


தற்போது வட- கிழக்கில் தொடரும் வன்செயல்களுக்கு பேச்சுவார்த்தை மேசை முற்றுப்புள்ளி வைக்கும். அதனையே நாம் இருதரப்பினருக்கும் வலியுறுத்தி வருகிறோம்.

பேச்சுவார்த்தைக்கு சுமுகமான சூழ்நிலை இல்லையென கூறிப் பேச்சு வார்த்தையைத் தள்ளிப் போட முடியாது எனவும் நோர்வே தூதரகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# தேவைப்பட்டால் இந்திய அரசு தலையிட வலியுறுத்துவேன்!

## தமிழக முதல்வர் அறிவிப்பு

சென்னை —



இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தேவைப்பட்டால் இந்திய அரசை தலையிட வலியுறுத்துவோம் என்று தமிழகத்தின் புதிய முதலமைச்சர் மு.கருணாநிதி தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கையில் நிரந்த சமாதானம் நிலவவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகத் தற்போதைய நிலை குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது.

இது தொடர்பாக அறிந்த பின்னர் நான் பிரதமருடன் பேச்சுக்கள் நடத்துவேன். இலங்கைத் தமிழ் மக்கள் பற்றி அறிந்த பின்னர், அவர்களைப் பற்றிக் கருத்துக் கூறுவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தனது பதவியை விரைவில் பொன்சேகா பொறுப்பேற்பாராம்



கொழும்பு —

தான் பூரண சுகமடைந்து வருவதாகவும், தற்போது காயங்கள் 90 வீதம் குணமடைந்துள்ளதாகவும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி, பாதுகாப்பு செயலர், தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர், அவசர சிகிச்சைப் பிரிவு இயக்குநர், வைத்திய நிபுணர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்திருப்பதுடன், தனது உடல் நலத்துக்காகப் பிரார்த்தனையில் ஈடுபட்ட மதகுருமார், பொதுமக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்தார்.

அத்துடன், விரைவில் தனது பணியைப் பொறுப்பேற்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் உத்தரவாதத்துக்கு சர்வதேச ஊடக அமைப்பு வரவேற்பு

கொழும்பு —

தமிழீழ விடுதலைப்புலிகள் ஊடக சுதந்திரத்துக்கு வழங்கியிருக்கும் சுதந்திரத்தை சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பின் தலைவர் கிறிஸ்டோபர் வாரென் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் தங்களது பணிகளிலிருந்து விலக வேண்டும் என்று அண்மையில் விடுக்கப்பட்டிருந்த எச்சரிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கண்டித்துள்ளார்.

சர்வதேச ஊடகவியலாளர் கூட்டமைப்பு, சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை ஊடகவியலாளர் ஒன்றியம், ஊடகத் தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு, இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் கூட்டமைப்பு மற்றும் இலங்கை முஸ்லிம் ஊடகவியலாளர் பேரவை ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது தமிழ்ச்செல்வன் தமது கண்டனத்தை தெரிவித்தார்.

கடந்த மே மாதம் 16 ஆம் திகதி சு.ப.தமிழ்ச்செல்வனை இந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் சந்தித்தபோது இராவணன் படையணி என்ற பெயரில் விடுக்கப்பட்டிருந்த அச்சுறுத்தல் குறித்த தங்கள் அதிருப்தியை வெளியிட்டனர்.

தமிழ் ஊடகவியலாளர்கள் எந்த ஒரு ஊடக நிறுவனத்திலும் பணி புரியலாம் என்றும், ஊடக சுதந்திரத்துக்கான உறுதியை தமிழீழ விடுதலைப் புலிகள் வழங்குவர் என்றும், இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு இணங்க வேண்டாம் என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் உறுதியளித்தார்.

எனவே, ஊடக சுதந்திரத்துக்கான உத்தரவாதத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் அளித்திருப்பதை வரவேற்றுள்ளோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாகர்கோவில் படைநிலைகள் மீது தொடர்ந்தும் தாக்குதல்

கொழும்பு —

நாகர்கோவில், முகமாலை இராணுவ முன்னரங்க நிலைகளில் கடந்த புதன்கிழமை தாக்குதல் இடம்பெற்றதாக இராணுவத் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

கடந்த புதன்கிழமை நாகர்கோவில் படைநிலைகள் சில தொடர் தாக்குதலுக்குள்ளாகின. இதன்போது ஆர்.பி.ஜிகள், 60மி.மீ மோட்டார்கள், 81மி.மீ மோட்டார்கள் ஆகியவற்றின் மூலம் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதல் 3 மணி நேரம் வரை நீடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, முகமாலையிலும் இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும், படையினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

# கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் அரசுக்கு எதிராக பிரசாரமாம் !

## இராணுவ அதிகாரிகள் குற்றச்சாட்டு

கொழும்பு —

போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் இரண்டு பிரதிநிதிகள் அரசுக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இராணுவ அதிகாரிகள் முறைப்பாடு தெரிவித்திருக்கின்றனர்.

அரச படைகளுடன் இணைந்து கருணா குழுவினர், புலிகள் மீது தாக்குதல் நடத்துவதாக கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் இருவர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இவர்கள் புலிகளுடன் இணைந்து இராணுவத்தினருக்கு எதிரான அறிக்கைகளை வெளியிட்டிருப்பதாகவும், அதனால் இராணுவத்துக்குப் பெரும் பிரச்சினை ஏற்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கண்காணிப்பாளர்கள் குறித்து கண்காணிப்புக்குழுத் தலைவருக்குத் தெரியப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ள பாதுகாப்பு அதிகாரிகள் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமும் இதுகுறித்து முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

# ஈழத் தமிழ் அகதிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்கள்

## இந்திய உள்துறை பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு —

இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு அகதிகளாக வந்துள்ள மக்களின் நலன்கருதி பல்வேறு நலத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் ஶ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினை காரணமாக 1983 ஆம் ஆண்டு முதல் கடந்த ஜூலை மாதம் வரை 2,79,354 பேர் தமிழகத்துக்கு அகதிகளாக வந்துள்ளனர்.

இதனால் தமிழ் நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் ஏற்படவில்லை என்று தமிழக அரசு தெரிவித்தது.

அகதிகள் வருகையைத் தவிர்க்க மத்திய அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. எனினும் அகதிகளாக வருபவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் நிவாரண உதவிகள் அனைத்தும் வழங்கப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்படுகிறது.

அவர்களை மீண்டும் இலங்கையில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

அவ்வப்போது மீளக்குடியமர விருப்பம் தெரிவிக்கும் அகதிகள் இலங்கைக்கு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கேபிள் இணைப்பு அடுத்த மாதம் நிறைவடையும்

சென்னை —

வரும் ஜூன் மாதத்துக்குள் இந்தியா, இலங்கை இடையே கடலுக்கடியிலான கேபிள் இணைக்கும் பணி நிறைவடையும் என்று தென்னிந்திய தொலைத் தொடர்பு சேவை பொதுமேலாளர் கே.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

தூத்துக்குடிக்கும் - கல்கிசைக்கும் இடையே கடலுக்கடியில் கேபிள் இணைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் திட்ட மதிப்பு ரூ 80 கோடி ரூபாவாகும் பி.எஸ்.என்.எல் மற்றும் இலங்கை அரசின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

# வன்னி இராணுவத் தளபதியுடன் வட பகுதி அரச அதிபர்கள் சந்திப்பு

கொழும்பு —

ஓமந்தை சோதனைச் சாவடியில் கடந்த மூன்று வாரகாலமாக நடைபெற்றுவரும் பாதுகாப்பு சோதனை காரணமாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் குறித்து வன்னிப் பிராந்திய இராணுவத் தளபதி தலைமையிலான குழுவுக்கும், அரச அதிபர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக ஓமந்தை சோதனைச் சாவடியில் சோதனைகள் இறுக்கமாக்கப்பட்டுள்ளது. இதனால் பொருட்களை ஏற்றிச் செல்லும் லொறிகளை அனுமதிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என இராணுவ அதிகாரிகள் தெரவித்தனர்.

இதேவேளை - மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக இராணுவத்தினருக்கு எடுத்துக் கூறப்பட்டது. ஆனால், மண்ணெண்ணையை எந்தக் கட்டுப்பாடும் இன்றி எடுத்துச் செல்ல அனுமதிப்பதாகத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டத்தைச் சேர்ந்த அரச அதிபர்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உயர்தர பரீட்சைக்கு மன்னாரில் ஆயிரத்து 324 பரீட்சார்த்திகள்

மன்னார்—

நாளை ஆரம்பமாகவுள்ள உயர்தர பரீட்சைக்கு மன்னார் மாவட்டத்தில் 1324 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.ஆபேல்றெவல் தெரிவித்தார்.

மன்னார் கல்வி வலயத்தில் இந்தப் பரீட்சைக்காக 1199 பரீட்சார்த்திகள் மொத்தமாக தோற்றவுள்ள நிலையில், இவர்களில் 272 பரீட்சார்த்திகள் தனிப்பட்ட ரீதியில் தோற்றவுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.ஆபேல் றெவல் மேலும் தெரிவித்தார்.

மேலும் அரசாங்க கட்டுப்பாடற்ற மடு கல்வி வலயத்தில் உயர்தரப் பரீட்சைக்கு இம்முறை மொத்தமாக 125 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதாக கல்விப்பணிப்பாளர் குறிப்பிட்டதுடன், இவர்களில் 25 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் உள்ளனர் எனத் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் இந்த வருட உயர்தர பரீட்சைகள் 11 பரீட்சை நிலையங்களில் நடைபெறுகின்றது. இதில் மடுகல்வி வலயத்தில் 2 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மன்னார் வலயத்தில் 5 இணைப்பு நிலையங்களும், மடுவலயத்தில் 2 இணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்ட கல்வி பணிப்பாளர், குறித்த பரீட்சைகளுக்கான பாதுகாப்பு ஒழுங்குகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளதாகத் தெரிவித்தார்.

# முதலுதவிப் பயிற்சி வகுப்பு மல்லாவியில் ஆரம்பம்!

கிளிநொச்சி—

தமிழீழ சுகாதார சேவையினர் கடந்த புதன்கிழமை மல்லாவி மத்திய கல்லூரி மற்றும் யோகபுரம் மகாவித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளிலும் முதலுதவிப் பயிற்சி வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தனர்.

இந்தப் பயிற்சி வகுப்புக்கள் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வாமன், தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் பற்சுகாதாரப் பிரிவுப் பொறுப்பாளரும், பல்வைத்திய நிபுணருமான சுதா ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் 250 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுக்கு அழைத்து செல்வதாக ஏமாற்றும் மன்னார் படகோட்டிகள்!

மன்னார்—

தமிழகத்துக்கு அழைத்துச் செல்வதாகத் தெரிவித்து, திருகோணமலை திருக்கடலூர் பிரதேசத்தைச் சேர்ந்த 4 குடும்பங்களைச் சேர்ந்த 11 பேரை, தலைமன்னார் பழைய பால கடற் பிரதேசத்தில் நிர்க்கதியாக தவிக்கவிட்டு இரண்டு படகோட்டிகள் தலை மறைவாகியுள்ளனர்.

இந்த 11 பேரிடமும் மொத்தமாக 45 ஆயிரம் ரூபா பணத்தை இந்த இரண்டு படகோட்டிகளும் பெற்றுள்ளனர். தற்பொழுது மன்னார் நகரில் தங்கியுள்ள இவர்கள், தமிழகத்துக்கோ அல்லது தமது சொந்த ஊரான திருக்கடலூருக்கோ செல்லமுடியாத நிலையிலுள்ளனர்.

இது தொடர்பாக மன்னார் சக வாழ்வு மன்றத்தினர், யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனத்திடம் அறிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தியாவுக்கு அகதிகளைக் கொண்டு சென்று விடுவது என்ற போர்வையில் சிலர் போதைவஸ்து கடத்தலிலும் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே இவற்றைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே இந்தியாவுக்குப் படகு மூலம் செல்வதற்காக தினமும் திருமலையிலிருந்து பெருமளவான தமிழ்க் குடும்பங்கள் மன்னார் நகருக்கு வந்த வண்ணமுள்ளன. திருகோணமலை மாவட்டத்தின் திருக்கடலூர், 10 ஆம் குறிச்சி, அலஸ் தோட்டம், உட்பட கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ் குடும்பங்களே இவ்வாறு தமது வீடுகளையும், உடமைகளையும் விட்டு விட்டு மன்னாருக்கு வந்து தமிழகம் செல்கின்றனர்.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம், வியாழன்வரை திருகோணமலையிலிருந்து சுமார் 40 குடும்பங்களைச் சேர்ந்த 75 இற்கும் மேற்பட்டோர் மன்னாருக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மோ)

# வீதிப்போக்குவரத்து குறித்து மாணவர்களுக்கு தெளிவூட்டல்

கிளிநொச்சி—

பாடசாலை மாணவர்களுக்கு வீதிப்போக்குவரத்து தொடர்பாக விழிப்பூட்டும் செயற்பாடுகளை தமிழீழ காவற்துறையின் வீதிப் போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் காலை கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்து விழிப்புணர்வு கருத்தூட்டல் இடம்பெற்றது.

வீதிப்போக்குவரத்து பிரிவு பொறுப்பாளர் ஜ.சிவராசா, வீதிப்போக்குவரத்து கண்காணிப்பாளர் இராமநாதன் ஆகியோர் வீதிப்போக்குவரத்துத் தொடர்பாக மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தினர்.

பாடசாலை செல்கையிலும், பாடசாலை முடிந்து செல்கையிலும் அதிகரித்துள்ள வாகன நெருக்கடிச் சூழலில் மாணவர்கள் தமது போக்குவரத்துக்களை இலகுபடுத்தல் தொடர்பாக இதில் தெளிவுபடுத்தப்பட்டது.

# சமாதான நீதிவானாக நியமனம்!

வவுனியா—



வவுனியா - மன்னார் வீதி வேப்பங்குளம் பகுதியில் வசிக்கும் தம்பிராசா திலீபன், வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலய ஆசிரியரும், யாழ்/தெல் லிப்பளை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவருமாவார். சமூக சேவையாளராக, பொதுப் பணிகளிலும் அக்கறையுடனும், ஆர்வத்துடனும் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது.

# படுகொலையை கண்டித்து அக்கராயனில் பேரணி

அக்கராயன்—

தமிழ் மக்களது படுகொலைகளைக் கண்டித்தும், ஐ.நா செயலாளர் நாயகம் இந்தப் படுகொலைகளைக் கண்டித்து குரல் கொடுக்க வேண்டுமென கோரியும் கிளிநொச்சி அக்கராயன் பிரதேச மக்கள் நேற்றுமுன்தினம் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

நேற்றுமுன்தினம் முற்பகல் அக்கராயன் அண்ணாசிலையடியில் ஆரம்பமான பேரணி ஸ்கந்தபுரம் வரை சென்றது. தமிழ் மக்களது படுகொலைகள் மக்களின் வாழ்வியலை முற்றாக பாதித்துள்ளன.

எனவே, ஐ.நா செயலகம் இந்தப் படுகொலைகளை நிறுத்த விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த பேரணியூடாக அக்கராயன் பிரதேச மக்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதன் பின்னர் ஐ.நா செயலர் கொபி அனானுக்கான மனுவை கிளிநொச்சியிலுள்ள யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கையளித்தனர்.

# வட்டுக்கோட்டை சென்ற வட்டக்கச்சி அனுமதி அட்டைகள்

கிளிநொச்சி—

வட்டக்கச்சிக்கு அனுப்ப வேண்டிய உயர்தரப்பரீட்சை மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வட்டுக்கோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததால் வட்டக்கச்சி மகா வித்தியாலய மாணவர்கள் அனுமதி அட்டை பெறவந்து ஏமாற்றத்துடன் வீடுதிரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள வட்டக்கச்சி மகா வித்தியாலய மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளை வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள கல்லூரி ஒன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் குறித்து வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர், கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளருடன் தொடர்புகொண்டு நிலமையை விளக்கினார்.

இதையடுத்து அனுமதி அட்டைகள் வட்டக்கச்சி உபதபாலகம் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது.

நாளை பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் உயர் அதிகாரிகள் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதால், மாணவர்கள் அனு மதி அட்டை பெறமுடியாது ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதோடு, மாணவர்களும், பெற்றோரும் விசனமடைந்துள்ளனர். (09)

# பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வெளியிணைப்பு இயந்திரங்கள்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 100 படகுகளுக்குரிய வெளியிணைப்பு இயந்திரங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

கியுடெக் - கரித்தாஸ் நிறுவனம் இந்த இயந்திரங்களை வழங்கியது.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் முல்லைத்தீவு செல்வபுரத்தில் அமைந்துள்ள கியுடெக் நிறுவனத்தில் இந்த கையளிப்பு நிகழ்வு நடைபெற்றது.

வெளியிணைப்பு இயந்திரங்களை கியுடெக் - கரித்தாஸ் நிறுவன மீன்பிடி திட்ட இணைப்பாளர் ரட்ணா, கள உத்தியோகத்தர் ராஜா, முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க தலைவர் அ.மரியராசா, உபதலைவர் இ.தணிகாசலம், செயலாளர் க.பரமசிவம் ஆகியோர் கையளித்தனர். (கு)

# குண்டுவீச்சிலிருந்து தப்புவது எப்படி புலிகள் வன்னியில் துண்டுப்பிரசுரம்

கிளிநொச்சி—

குண்டு வீச்சிலிருந்து பாதுகாத்துக் கொள்வது எப்படி? என வன்னிப் பிரதேச மக்களுக்கு விடுதலைப் புலிகள் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து வருகின்றனர்.

கடந்த யுத்த காலங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வந்தன. அவ்வாறான தாக்குதல்களால் உயிர் சேதங்கள் ஏற்பட்டன.

குண்டுத் தாக்குதல்களிலிருந்து மக்கள் பாதுகாப்பாக எப்படி இருக்க வேண்டும் என்பதை விடுதலைப் புலிகள் வன்னிப் பிரதேசம் எங்கும் துண்டுப்பிரசுரம் மூலம் மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றனர்.

மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் மக்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

# எட்டு அருட்சகோதரர்கள் குருக்களாக திருநிலை

மன்னார்—

மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த 8 அருட்சகோதரர்கள் நேற்று குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர்.

மன்னார் செபஸ்ரியார் பேராலயத்தில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் நடைபெற்ற விசேட திருப்பலி வேளையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசெப்பு ஆண்டகையால் குறித்த எட்டு அருட்சகோதரர்களும் இறை பணி செய்ய குருக்களாக திருநிலைப் படுத்தி வைக்கப்பட்டனர்.

மன்னார் மறைமாவட்ட வரலாற்றில் இவ்வாறு ஒரே நாளில் 8 பேர் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

# கலந்துரையாடல்

மன்னார்—

மன்னார் மாவட்டத்தில் முன்பள்ளி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மடுவலய கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

என்.கில்டா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் முன்பள்ளி ஆசிரியர்களதும், மாணவர்களதும் அபிவிருத்தி நிலை தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (மோ)

# புத்தகக் கண்காட்சி ஆரம்பம்!



முல்லைத்தீவு—

முல்லைத்தீவு - விசுவமடுவில் மாபெரும் புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் நடைபெறுகிறது. மாவீரர் படிப்பகத்தால் நடத்தப்படும் இந்தக் கண்காட்சியில் பல்லாயிரம் பயன்மிகு நூல்களும், சஞ்சிகைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை கலாநிதி க.சோமஸ்கந்தன் தலைமையில் கண்காட்சி அங்குரார்ப்பண நிகழ்வுகள் விசுவமடு மாவீரர் படிப்பகத்தில் இடம்பெற்றன.

காட்சிக்கூடத்தை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திறந்துவைத்தார். கண்காட்சியை பெருமளவு பாடசாலை மாணவர்களும், வாசகர்களும் பார்வையிட்டுப் பயன்பெற்று வருகின்றனர்.

இந்தக் கண்காட்சி இன்றுவரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இடம்பெயர்ந்தோர் முகாமுக்கு பத்து நாட்களாக நீர் இல்லை!

வடமராட்சி கிழக்கு—

வடமராட்சி கிழக்கு பகுதியில் சுனாமியால் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு கடந்த சில நாட்களாக குடிநீர் விநியோகிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் வாழ்ந்து வருகின்ற இந்த மக்களுக்கு 10 நாட்களுக்கு மேலாக குடிநீர் விநியோகிக்கப்படாமல் இருப்பதால் இந்த முகாம்களில் தங்கியுள்ள மக்கள் குடிநீர் பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக கவலை தெரிவித்தனர்.

குடிநீர் விநியோகிக்கப்படாமல் இருப்பதற்கான காரணத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டபோது, எரிபொருட்களின் விலையேற்றமே இதற்குக் காரணம் எனத் தெரிவித்து மௌனம் சாதிக்கின்றனர்.

எரிபொருள் விலை அதிகரித்தால் குடிநீர் தொடர்ச்சியாக வழங்க முடியாத நிலை ஏற்பட்டுவிடுமே என்ற அச்சநிலையில் அந்த முகாமில் உள்ள மக்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மீனவர்களின் சுதந்திரமான தொழிலுக்கு வழி வகைகளை ஏற்படுத்தித் தாருங்கள்

## அரச அதிபருக்கு கடற்தொழில் சமாசம் கடிதம்

வடமராட்சி —

வெற்றிலைக்கேணியில் இடம் பெற்ற கடற்சமரை அடுத்து படையினரால், கடற்தொழில் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். படையினரின் இந்த மனிதாபிமானமற்ற செயலை வன்மையாக கண்டிப்பதுடன் இதுதொடர்பான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டுமென வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில் தடையால் வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் கற்கோவளம் தொடக்கம் தொண்டமானாறு வரையான 13 கிராமங்களில் 4150 குடும்பங்களும், 1990 ஆம் ஆண்டு ஆடி மாதம் வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற 1650 கடற்தொழில் குடும்பங்களும், வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் 1450 குடும்பங்களும் தொழில் தடையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் குழந்தைகள், சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் துன்பியல் நடவடிக்கைகளை யார்தான் எண்ணிப்பார்க்கிறார்கள்?

சிறுவர்களின் நலனில் அக்கறையுள்ள சிறுவர் பாதுகாப்பு நிதியம், முதியோரைப் பேணிப் பாதுகாக்க பிரதேச செயலகம் இவையெல்லாம் இருந்து என்ன பயன்? போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மனித உரிமைகளை பேணிப்பாதுகாக்க மனித உரிமை ஆணைக்குழு இவையெல்லாம் யாழ். மாவட்டத்தில் இருக்கும்போது எவ்வளவு அராஜகம், எவ்வளவு கொடுமைகள் எமது மக்களுக்கு நடைபெற்று வருகிறது. இவையனைத்தும் பார்த்துக்கொண்டு வாய்மூடி மௌனம் சாதிப்பது மேலும் மேலும் தமிழரை கொன்றொழிப்பதற்கு அனுசரணை வழங்குவது போல் தெரிகிறது.

கடலோரத்தில் வாழும் கடற்தொழிலாளர்கள் மட்டுமல்ல யாழ். மாவட்டத்தில் வாழும் அனைத்து தமிழ் பேசும் மக்களும் நிம்மதியாக வாழ முடிகிறதா? இரவில் கூட நிம்மதியாக நித்திரை கொள்ள முடிகிறதா? எந்த நேரம் யார் கொல்லப்படுவார்களோ என்று ஏக்கம், வெள்ளைவானில் கடத்தல் நடவடிக்கை, வீதிக்கு வீதி, சந்திக்குச் சந்தி தமிழன் சுட்டு வீழ்த்தப்படும் அவலம், பால் வேறுபாடின்றி, சிறுவர், பெரியவர் என்ற வித்தியாசமின்றி அல்லைப்பிட்டியில் இளம் குடும்பம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளமை, ஆட்கடத்தல், கொலைகள் இவையெல்லாம் யாழ். மண்ணில் சர்வசாதாரணமாக நடந்துகொண்டு இருக்கும்போது, யாழ்.மாவட்டத்தில் இருக்கும் மனிதநேய அமைப்புகள், சர்வதேச நிறுவனங்கள் இவைகளின் செயற்பாடுதான் என்ன?

மக்களைப் பாதுகாக்கின்றோம் என்று கூறி நிற்கும் படைகளின் கண்முன்னே இவ்வளவு அராஜகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதன்பின்பும் பாதுகாப்பு என்னும் பெயரில் இந்தப் படைகள் தேவைதானா? கண்காணிப்புக்குழு பக்கச் சார்பாக பாதுகாப்புப் படையுடன் சேர்ந்தே அறிக்கைகளை விட்டு வருவது கண்டு எமது மக்கள் விசனமடைகின்றார்கள்.

எமது மக்களின் அன்றாட வாழ்க்கையில் விளையாடும் யாரையும் விட்டு வைக்க மாட்டோம். எமது மக்கள் மீண்டும் எந்தவித தடையுமின்றி தொழிலில் ஈடுபட அனைத்து வழி வகைகளையும் செய்து உதவவேண்டும் என தங்களை அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

எமக்கு வேண்டியது அரைகுறை நிவாரணம் அல்ல. நாம் உழைத்து வாழவேண்டும். எமது தொழில் விடயத்தில் மேலும் மேலும் தடை விதிக்க வேண்டாம். நாம் எமது கடலில் எந்தவித கெடுபிடியுமில்லாமல் சுதந்திரமாக தொழில் செய்ய அரசின் பிரதிநிதியாக இருக்கும் தாங்களே சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியவர்கள். எமது மக்கள் இயல்பாக தொழில்செய்ய வேண்டும் என தங்களை அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

பொது மக்கள் மீது தொடர்ந்தும் அராஜக நடவடிக்கைகளைச் செய்ய அரசும், அரச படைகளும் எத்தனிக்க வேண்டாம். இதனால் பாரிய விளைவுகளை அரசே எதிர்கொள்ளும் நிலை ஏற்பட வாய்ப்புகள் உண்டு. எனவே எமது மக்களின் தொழில் விடயத்தில் கைவைக்க வேண்டாம்.

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள். கடற்தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டால் எப்படியான நிலை ஏற்படும் என்பதை அன்று ஒரு தடவை நிரூபித்தோம். மறுமுறையும் அப்படியொரு நிலை ஏற்பட வாய்ப்புக்கள் அளிக்கவேண்டாம்.

எமது மக்கள் நிம்மதியாக வாழ வழிநிலையை ஏற்படுத்துங்கள். உங்களால் ஏற்படுத்த முடியாதவிடத்து, எமது மக்கள் வன்னி மண்ணுக்குத் தொழில் உபகரணங்களுடன் செல்ல அனுமதி கொடுங்கள் என்றும் தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



றொசைறோ என்ற தொழிலாளியின் சுட்டுவிரல் நுனிப்பகுதி துண்டிக்கப்பட்டதால் அவருக்கு தொழிலாளர் நட்டஈட்டுக் காப்புறுதி தொகையான 88 ஆயிரத்து 898 ரூபா 80 சதத்தை செலிங்கோ காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் யாழ். மாவட்ட முகாமையாளர் சே.தவசீலன் கடந்த புதுவருட தினத்தில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் வகையாக மாட்டிக்கொண்டனர்

பண்டத்தரிப்பு —

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இரண்டு திருடர்கள் கடந்த புதன்கிழமை பண்டத்தரிப்பு - பனிப்புலம் பகுதியில் வகையாக மாட்டிக்கொண்டனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடந்த புதன்கிழமை இவர்கள் பல்வேறு இடங்களில் திருடிய பொருட்களை விற்பனை செய்துகொண்டிருந்தபோது - இவர்கள் மீது சந்தேகம் கொண்ட அந்தப் பகுதி இளைஞர்கள் இவர்களைப் பிடித்து விசாரித்தபோது திருட்டு அம்பலமானது. இவர்கள் நீர் இறைக்கும் மோட்டார்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்றவற்றை திருடி விற்பனை செய்தது தெரிய வந்தது.

அத்துடன் இவர்களது வீட்டிலிருந்து கிறைண்டர், சாக்கு நிறைய சி.டிக்கள் என்பனவற்றுடன், போலித் துப்பாக்கி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது. இதனையடுத்து இளைஞர்களால் போலித் துப்பாக்கி உடைத்து எறியப்பட்டது.

இதன்பின் இரண்டு திருடர்களும் இளைஞர்களால் இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்களால் திருடப்பட்ட பொருட்கள் பொலிஸாரின் விசாரணையின் பின்னர் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை இந்த திருட்டுக்களுடன் தொடர்புடைய மேலும் இருவர் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (43)

# விண்ணப்பம் கோரல்

கொழும்பு —

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 2 ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்குப் பதவியுயர்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

இலங்கை கல்வியியலாளர் சேவையில் 2 ஆம் வகுப்பில் I ஆம் தரத்தின் கீழ் ஆவணப்படுத்தப்பட்ட பதவியில் 5 வருடங்கள் சேவையாற்றியவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி யுடையவர்கள்.

தகுதியுடையவர்கள் விண்ணப்பங்களை ஜூன் மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சு இசுறுபாய, பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

◆◆◆

அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பதற்கான பொதுப் போட்டிப் பரீட்சைக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் ஒரே தடவையில் தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட வேறு நான்கு பாடங்களிலும் திறமைச் சித்தியுடையவர்கள் அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தப் பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெறும் புள்ளி அடிப்படையில் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.


விண்ணப்பங்களை ஜூன் மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு பரீட்சை கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.



அகில இலங்கைத் திருமுறை மன்றம் கடந்த மாதம் 13 ஆம் திகதி நடத்திய பன்னிரு திருமுறை முற்றோதல் நிறைவு பெருவிழாவில் திருப்பனந்தாள் ஆதீன தேவார இசைமணி சங்கீத பூசணம் வி.சிவஞான சேகரத்திற்கு மன்ற சார்பில் சிவஶ்ரீ சதா மகாலிங்க சிவக் குருக்கள் பாராட்டிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

# விடுதலைப்புலிகள் சுயாதீனமாக செயற்படும் நிலைதோன்றியுள்ளது

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம் —

சர்வதேசசமூகத்தைப்புறக்கணித்துவிட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் தற்போது சுயாதீனமாக செயற்படுகிற நிலை ஏற்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத் தீர்மானம் குறித்து அவர் கூறியுள்ளதாவது -

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நடவடிக்கையானது அமைதி முயற்சிகளில் எதிர்விளைவை உருவாக்கும். சர்வதேச சமூகத்தை புறக்கணித்துவிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இப்போது சுயாதீனமாக இயங்க முடியும்.

எதிர்காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளைச் சர்வதேச சமூகம் பொறுப்பாக்க முடியாது.

இந்தத் தடையால் நிதி திரட்டல் மற்றும் ஆயுதக் கொள்வனவுக்கு தடை ஏதுமில்லை. வேறு வழிகளில் இந்தத் தடைகள் எதிர்கொள்ளப்படும்.

அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்ட போதும் அதனது நடவடிக்கைகள் தொடரவே செய்தன எனத் தெரிவித்தார்

ஐக்கிய தேசியக் கட்சியின்பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுகையில் - தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளை சுதந்திரமாக செயற்பட அனுமதிக்கக் கூடாது. ஆனால் பேச்சுக்களை நடத்துவதற்கான மேலதிக சந்தர்ப்பங்களை பயன்படுத்த வேண்டும் என்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடை செய்துவிடுவதால் மட்டும் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்று முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியுள்ளதாவது -

இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா மற்றும் இந்தியாவில் பல ஆண்டுகளுக்கு முன்னரே விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்ட போதும் இலங்கையில் புலிகளின் செயற்பாடுகளுக்கு எதுவித பாதிப்பும் இல்லை. ஐரோப்பிய ஒன்றியத் தடைக்குப் பின்னரும் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ந்து தங்களது நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

யுத்த நிறுத்தம் மற்றும் இராணுவப் பிரச்சினைகளை மட்டுமே பேசிக்கொண்டிருப்பதால் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. பேச்சு முறைகளில் மாற்றம் வேண்டும் என்றார்.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் வலியுறுத்தியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தீர்மானத்தை ஜே.வி.பி வரவேற்றுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகளை முழுமையாகத் தடை செய்ய வேண்டும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல் வீரவன்ச வலியுறுத்தியுள்ளார்.

# சோதனைச் சாவடி விஸ்தரிப்பால் மகப்பேற்றுமனை பணிகள் முடக்கம்

யாழ்ப்பாணம் —

குருநகர் கடற்கரை வீதியில் சவக்காலைச் சந்தியில் அமைந்துள்ள இராணுவத்தினரின் சோதனைச்சாவடி விஸ்தரிக்கப்பட்டு, இராணுவக் கெடுபிடிகளும் அதிகரித்து வருவதால் இந்தச் சோதனைச் சாவடிக்கு அண்மையில் அமைந்துள்ள குருநகர் அரசினர் மகப்பேற்றுமனையின் பணிகள் முடக்கமடைந்துள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நீண்டகாலமாக இயங்கிவரும் குருநகர் அரசினர் மகப்பேற்றுமனையின் சேதமடைந்த கட்டடங்கள் மற்றும் மருத்துவமாது தங்கும் விடுதி என்பன புனரமைக்கப்பட்டுள்ள போதும் சோதனைச் சாவடியில் இராணுவத்தினரின் பிரசன்னம் அதிகரித்துள்ளதாலும் மற்றும் இராணுவக் கெடுபிடிகளாலும் இங்கு இரவில் எவரும் தங்குவதில்லை.

இதனால் கர்ப்பிணித் தாய்மார்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

எனவே இது தொடர்பாக உரியவர்கள் நடவடிக்கை எடுத்து இராணுவச் சோதனைச் சாவடியின் விஸ்தரிப்பை தடுத்துநிறுத்தி, மகப்பேறு மனையின் அபிவிருத்திக்கு உதவ வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழர் படுகொலையைக் கண்டித்து

## தென்னாபிரிக்காவில் ஆர்ப்பாட்டம்




டர்பன் —

இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தினது மனித உரிமை மீறல்களைக் கண்டித்து தென்னாபிரிக்கத் தமிழர்கள் பெருந்திரளானோர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியா ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தின் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தெனன்னாபிரிக்கத் தமிழர் கூட்டமைப்பு, அமைதிக்கும் நீதிக்குமான திராவிடர் அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றின் சார்பில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அல்லைப்பிட்டியில் 4 மாதக் குழந்தை உள்ளிட்ட 13 பேர் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட புகைப்படங்களை ஏந்திய பதாதைகளுடன் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களை விளக்கும் பதாதைககளுடன் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் தென்னாபிரிக்காவுக்கான ஐ.நா. தூதுவரக அதிகாரி மைக்கேல் லுஜ்ஸ்றொமிடம் முறைப்பாடுமனு அளிக்கப்பட்டது. மேலும் இன்று டர்பன் நகரிலும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு சார்வில் இத்தகைய கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

# ஐரோப்பிய ஒன்றிய தீர்மானம் அமைதியை உருவாக்குமாம்

## அரசு நம்பிக்கை

கொழும்பு —

ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்தால் இலங்கையில் அமைதி நிலைமை ஏற்படும் என்று அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் கடும் நடவடிக்கையை பாராட்டுவதுடன், சர்வதேச சமூகத்தின் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்ட பேச்சுக்களுக்கு அது ஊக்கமளிக்கும்.

போர் நிறுத்தம் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் நடத்த அரசாங்கம் தயாராகவுள்ளது.

சர்வதேச சமூகத்தின் கருத்துக்களை கவனத்தில் கொண்டு மேலதிக வன்முறைகளைக் கைவிட்டு விட்டு அதை முயற்சிகளில் ஆக்கபூர்வ பங்களிப்பை விடுதலைப்புலிகள் வழங்க வேண்டும்.

போர் நிறுத்தத்துக்காக கண்காணிப்புக் குழுவினரது பணிக்கான ஆதரவு தொடரும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எரிபொருள் விலைகளை அதிகரிக்க முயற்சி !

கொழும்பு —

டீசல் லீற்றர் ஒன்றின் விலையை 3 ரூபாவாலும், மண்ணெய்ணெய்யின் விலையை 24 ரூபாவாலும் அதிகரிக்கும் வகையிலான பேச்சுவார்த்தைக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்திய எண்ணெய் நிறுவனமும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் திறைசேரியிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

எனினும் பெற்றோல் விலையை உயர்த்தும் கோரிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

சர்வதேசத்தில் எரிபொருளின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள நிலையிலேயே இந்தப் பேச்சுவார்த்தைக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையின்படி விலையுயர்வுகள் ஏற்படுத்தப்படுமானல் டீசல் லீற்றர் ஒன்று 61 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்று 62.50 ரூபாவாகவும் உயரும் எனத் தெரிவிக்கப்படுகிறது . (01)

# இலங்கையில் வன்முறை அதிகரிப்பு ! இந்திய அரசாங்கம் ஏன் மௌனம்?

## கேட்கிறார் ஜஸ்வந்சிங்

கொழும்பு —

இலங்கை வன்முறைகள் அதிகரித்து வரும் நிலையில் நாளாந்தம் அகதிகள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. ஆனாலும், இந்திய அரசு ஏன் மௌனமாக இருக்கிறது என இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவை எதிர்க் கட்சித் தலைவரும், இந்தியாவின் முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சருமான பார தீய ஜனதா கட்சியின் ஜஸ்வந்சிங் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நாடாளுமன்றில் பேசியதாவது -

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையிலான போர் நிறுத்தம் மீறப்பட்டு வருகிறது. சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் மோதல் ஏற்படும் சூழல் காணப்படுகிறது.

இலங்கையிலிருந்து நாளாந்தம் தமிழர்கள் அகதிகளாகப் படகுகளில் தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்திய அரசு இதில் எதையுமே கண்டுகொள்ளாததைப் போல அமைதி காப்பது வியப்பாக இருக்கிறது.

இந்தியா தனது வெளிவிவகாரக் கொள்கையை அமெரிக்காவிடம் அடகு வைத்துவிட்டது எனத் தெரிவித்தார்.

# தமிழ் மக்களின் படுகொலைகள் குறித்து சர்வதேசத்தின் நிலை அதிர்ச்சியளிக்கிறது

## திருமலை மாவட்ட மாணவர் பேரவை தலைவர் புரட்சி

திருமலை —

தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படவது குறித்து சர்வதேசம் மௌனமாக இருப்பது அதிர்ச்சியளிக்கிறது என திருகோணமலை மாவட்ட தமிழீழ மாணவர் பேரவையின் தலைவர் புரட்சி தெரிவித்துள்ளார்.

திருமலை மாவட்டம் ஈச்சிலம்பற்று பிரதேசம் வெருகலில் பல்வேறு சமூக தொண்டர் நிறுவனங்களுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் அவர் பேசியதாவது.

சர்வதேச சமூகத்தின் மீது இன்னமும் தமிழர்களுக்கு நம்பிக்கை உள்ளது. அரசாங்கத்தாலும், அரச படைகளாலும் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்படுகிற வன்முறைகளைப் பாரதூரமாக சர்வதேச சமூகம் கருத வேண்டும்.

4 மாதக் குழந்தை 4 வயது குழந்தை என தமிழ் மக்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவது குறித்து சர்வதேச சமுகம் தொடர்ந்து மௌனமாக இருந்து வருகிறது. தமிழ் மக்களின் படுகொலைகள் தொடர்பான சர்வதேச சமூகத்தின் மௌனமானது எமக்கு அதிர்ச்சியளிக்கிறது.

தமிழ் மக்கள் மீதான படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிட்டு வரும் அரசாங்கத்துக்குக் கண்டனம் தெரிவித்து அந்த அரசாங்கத்துக்கான அனைத்து உதவிகளையும் சர்வதேச சமூகம் நிறுத்த வேண்டும். சர்வதேச சமூகத்திடமிருந்து தமிழ் மக்கள் இன்னமும் நீதியை எதிர்பார்க்கின்றனர்.

ஒரு இனத்தினது விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாக முத்திரை குத்தமுடியாது. இதை எமது தேசியத் தலைவர் தமது மாவீரர் நாளில் மிகத் தெளிவாகவே சுட்டிக் காட்டியுள்ளார் எனத் தெரிவித்தார்.

# இந்திய வங்கிகளில் மோசடி செய்த 3 இலங்கையர் உட்பட நால்வர் கைது

சென்னை —

வெளிநாட்டு ஏ.ரி.எம் போலி கடனட்டை மூலம் சென்னையில் பல வங்கிகளில் பணத்தைக் கொள்ளையடித்து வந்த இலங்கையைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டதுடன், பெருமளவு பணம் மற்றும் கைத்தொலைபேசி, பாஸ்போட் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராஜசீலன்(வயது 33), ரமேஸ்(வயது 35) திருகோணமலையைச் சேர்ந்த ரட்ணராஜா மற்றும் இவர்களது சாரதியான சென்னையைச் சேர்ந்த பக்கிரிசாமி ஆகிய நால்வருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

எச்.டி.எப்.சி வங்கியிலிருந்து வெளிநாட்டு ஏ.ரி.எம் கடனட்டை மூலம் பெருமளவு பணம் எடுக்கப்பட்டுள்ளதாக சென்னை மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு உதவி ஆணையாளர் பாலுவிடம் வங்கி முகாமையாளர் முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து நடத்தப்பட்ட விசாரணையில் குணசேகர் என்பவர் கைது செய்யப்பட்டார். இவர் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்து இலங்கையைச் சேர்ந்த மூவர் இதில் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இதனையடுத்து ஏ.ரி.எம் மூலம் பணம் எடுக்கும் சகல நிலையங்களையும் கண்காணிக்குமாறு சகல பாதுகாப்பு ஊழியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

இதனையடுத்து ஜே.ஜே நகரில் இவர்கள் வாகனமொன்றில் சென்று கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 6.5 லட்சம் ரூபா பணம், இரண்டு பாஸ்போட், ஆறு கைத்தொலைபேசிகள் மற்றும் 116 போலி கடனட்டைகள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த ஒவ்வொரு அட்டையும் பத்து இலட்சம் ரூபா பெறுமதி கொண்டவை. இவர்கள் இந்த கடனட்டைகளைப் பயன்படுத்தி இதுவரை ரூபா 20 லட்சத்தை வங்கிகளிலிருந்து எடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ராஜசீலன் மற்றும் ரமேஸ் இருவரும் 1999 ஆம் ஆண்டு சென்னையிலிருந்து வெளிநாடு செல்வதற்காக அகதிகளாக வந்தனர். கௌரி சீராளன் என்பவர் தற்போது இங்கிலாந்தில் உள்ளார். இவரே இந்த மோசடி நடவடிக்கைக்கு பின்னால் உள்ளவர் என நம்பப்படுகிறது. கைப்பற்றப்பட்ட இரண்டு பாஸ்போட்களும் பத்து நாட்களுக்கு முன்னரேயே இங்கிலாந்திலிருந்து வந்துள்ளது. இந்தக் குறுகிய காலப் பகுதிக்குள் சேலம், கோயம்புத்தூர், திருச்சி, பழனி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் இவர்கள் பணத்தை வங்கிகளிலிருந்து பெற்றுள்ளனர்.

# அமைச்சரவை மாற்றம்?

கொழும்பு —

நேற்று நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அடுத்து அமைச்சரவை மாற்றியமைக்கப்படக் கூடும் என்று ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவித்தன.

எதிர்வரும் புதன் கிழமை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூடி உள்ளூராட்சி சபை தலைவர்களைத் தெரிவு செய்யவுள்ளது.

அதேபோல் புதிய அமைச்சுப் பொறுப்புக்கள் உருவாக்கப்பட்டு புதிய அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் நியமிக்கவும் மகிந்த ராஜபக்ச முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் நாட்களில் அரசாங்கத்தில் இணையக்கூடும் என்றும் அவர்களுக்கமைய இந்த அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.



*ஜப்பானுக்கு 5 நாள் விஜயத்தை மேற்கொண்டு சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரரை அந்த நாட்டு அமைச்சரவைச் செயலாளர் சின்சூ அபே கைலாகு கொடுத்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.*

# ஆயுதக் கொள்வனவு குறித்து விசாரிப்பதற்கு குழு நியமனம்

கொழும்பு —

அரசாங்கத்தால் 2000 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை 100 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் ஆயுதங்கள், யுத்த தளபாடங்கள் கொள்வனவு செய்தமை தொடர்பாக விசாரணை மேற்கொள்ள குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார். இதன் தலைவராக உயர்நீதிமன்ற நீதியரசர் சிரானி திலகவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக உயர் நீதிமன்ற நீதியரசர் நிஷங்க உத்தலகமவும், நிமல் எட்வேட் திஸநாயக்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆணைக்குழு விரைவில் விசாரணை மேற்கொண்டு மூன்று மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கும், என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
குணன்இலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனன்இலனாம் ஏமாப்பு உடைத்து
- திருக்குறள்.

## நமது நோக்கு

# அரசை அழுத்தும் தடை

தமிழ் மக்கள் மீது இராணுவ நெருக்கடிகளைத் திணித்து போருக்குள் தள்ளிவிட்டிருக்கும் இலங்கை அரசு - சர்வதேச அரங்கில் தமிழ் மக்களின் போராட்டத்தை பலவீனப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறது.

ஜப்பானில் மங்கள சமரவீரவும், அமெரிக்காவில் அஜித் நிவடால் கப்ராலும் கடந்த சில நாட்களாக புலிகளுக்கு எதிரான பிரசாரத்தில் இறக்கி விடப்பட்டிருக்கிறார்கள்.

சர்வதேச அரங்கில் புலிகளைப் பயங்கரவாதிகளாக்கிவிட்டு - தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை படை பலத்தைக்கொண்டு சுலபமாக நசுக்குவதுதான் அரசின் திட்டமாகும்.

ரணில், சந்திரிகா போன்றோரை விடவும் இந்த விடயத்தில் இப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீவிர கவனம் செலுத்துகிறார். இதற்கென தன்னைச் சூழ சிங்களப் பேரினவாதிகளையும் வைத்துக்கொள்ளத் தவறவில்லை.

இந்த வகையில் தான் ஐரோப்பிய யூனியனும் புலிகளைத் தடைசெய்துவிட அரசு படாதபாடுபடுகிறது. ஆனால், ஐரோப்பிய யூனியன் புலிகள் இயக்கம் மீது தடைவிதித்திருந்தால் - பெரும் நெருக்கடியைச் சந்திக்கப்போவது இலங்கை அரசாங்கமாகத்தானிருக்கும்.

'ஆப்பு இழுத்த குரங்கு' போன்ற கதிக்கு உள்ளாகப் போவது அரசாங்கம் தான். ஏனென்றால், புலிகளைத் தடைசெய்துவிட்டு ஐரோப்பிய யூனியன் அதற்குப் பிறகு புலிகளுடன் எந்த வகையிலும் தொடர்பை வைத்திருக்கவோ, அழுத்தம் கொடுக்கவோ முடியாது.

இதனால் ஐரோப்பிய யூனியன் நாடுகள் இலங்கை அரசு மீதுதான் அழுத்தங்களைக் கொடுக்கும். புலிகளைத் தடைசெய்வதுடன் ஐரோப்பிய யூனியனின் இலங்கை மீதான அக்கறை முடிந்து விடாது.

இதனால், புலிகளைத் தடைசெய்துவிட்டு அவர்களைத் தொடர்ந்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான முயற்சிகளிலேயே ஐரோப்பிய யூனியன் ஈடுபடும்.

அப்படிப்பட்ட சூழலில் அரசுக்கு தார்மீக ஆதரவை ஐரோப்பிய யூனியன் கொடுத்தாலும் - நிறையவே அழுத்தங்களைக் கொடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்போது மகிந்த ராஜபக்ஷ அரசு தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தும் படுகொலை முதல் அதிகரித்த பாதுகாப்பு செலவினங்கள் வரை ஐரோப் பிய யூனியனின் கடும் கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கிறது.

எனவே, புலிகள் மீது தடை விதித்த பின்னர் - இலங்கை அரசு தாம் நினைத்தபடி ஆட முடியாது. பாதுகாப்பு செலவினத்தைக் கட்டுப்படுத்துவது முதல் தமது நிதியுதவிகள் பயன்படுத்தப்படும் விதம் வரையில் அனைத்தையும் ஐரோப்பிய யூனியன் இறுக்கமாகவே கண்கா ணிக்கும்.

புலிகள் மீதான தடையை நியாயப்படுத்துவதற்கு ஐரோப்பிய யூனியன் இலங்கை அரசு மீது இறுக்கமான போக்கை கடைப்பிடிக்கும். ஐரோப்பிய யூனியன் புலிகளைத் தடைசெய்தால் - அதன் பின்னர் அவர்கள் தாம் நினைத்தபடி செயற்பட முயற்சித் தாலும் -


இலங்கை அரசு அப்படி செயற்படமுடியாது. தமிழ் மக்கள் மீது இப்போது மேற்கொள்ளப்படும் நெருக்கடியைக் கூட அரசு செயற்படுத்த முடியாத நிலை உருவாகிவிடும்.

ஏனென்றால், அது புலிகளின் நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதாகிவிடும்.

எனவே, புலிகளைப் பொறிக்குள் மாட்ட நினைக்கும் அரசு எண்ணெயிலிருந்து அடுப்புக்குள் விழுந்த கதைக்கு உதாரணமாகவே இருக்கப்போகிறது. இதற்குத்தான் சர்வதேச சமூகத்தை தமிழ் மக்களுக்கு எதிராக அது திருப்பிவிடப்பார்க்கிறது. ஆனால், அதன் விளைவாக அவர்களுக்கு ஏற்படப் போகும் நெருக்குதல் சாதாரணமாக இருக்காது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்



# நூலகத்துக்குச் செல்ல அச்சமடையும் மக்கள்

யாழ்ப்பாணம் —

யாழ்-பருத்தித்துறை வீதியில் கடமையில் ஈடுபடுகின்ற படையினர் நூலக வளவினுள் இருப்பதனால் நூலகங்களுக்கு மக்கள் செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை வீதியிலுள்ள கோப்பாய் உப அலுவலக நூலகம், புத்தூர் பொது நூலகம், நீர்வேலி பொது நூலகம் என்பனவற்றுக்கு அருகிலும், நூலக வளாகத்திலும் கடமையில் ஈடுபட்டிருப்பதால் நூலகங்களுக்குச் செல்லுகின்ற வாசகர்கள் அச்சம் காரணமாக அங்கு செல்வதைத் தவிர்த்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போது குண்டு வீச்சு, துப்பாக்கிச்சூடு படையினர் மீது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தச் சம்பவங்களின்போது இந்தப் பகுதிகளில் காணப்படுகின்ற மக்கள் மிகவும் மோசமாகத் தாக்கப்படுகின்றனர்.

இதனால் அச்சமடைந்த மக்கள் படையினரின் நடமாட்டம் அதிகமாக இருக்கின்ற இடங்களை தவிர்த்து வருகின்றனர்.

## உதைபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம்

யாழ். வலய பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சி போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். வலய உடற்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். வலயப் பாடசாலைக்களுக்கிடையிலான உடற்பயிற்சி காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதால் போட்டியில் பங்கு கொள்ளும் மாணவர்களை உரிய நேரத்தில் அனுப்பிவைக்கும்படி பாடசாலை அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம் —

யாழ். லயன்ஸ்கழக அனுசரணையுடன் சொண்ட் தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் பண்டத்தரிப்பில் கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 75 கண்பார்வை குறைபாடுடையவர்களுக்கு மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

கடந்த மாதம் பண்டத்தரிப்பு பற்றிமா தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டவர்களுக்கே மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

## பதிவுகளை மேற்கொள்ளவும்

வடமராட்சி —

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவர்களாக உள்ளவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார்.

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களாக அனைவரும் புலோலி கிராமக் கோட்டுச் சந்தியில் உள்ள சங்கப் பணிமனையில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடற்தொழில் உபகரணம் வழங்கல்

யாழ்ப்பாணம் —

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் கொக்குவில் மேற்கு கடற்தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் காலை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் வைத்து கொக்குவில் மேற்கைச் சேர்ந்த 13 பயனாளிகளுக்கு 14ஆயிரம் ரூபா பெறுமதியான கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உபதலைவர் பேராசிரியர் வே.ப.சிவநாதன், திட்ட முகாமையாளர் தே.தேவானந்த், நீரியல் வளத்திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மேற்கு உலகம் அதிருப்தி!

கொழும்பு —

அதிகரித்து வரும் வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான எந்த நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்காதிருப்பது குறித்து மேற்குலக ராஜதந்திரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மையில் வன்னி சென்றிருந்த அகாசியிடம் விடுதலைப்புலிகள் வெளிப்படுத்திய செய்தியின் முக்கியத்துவத்தை ஜனாதிபதி உணரவில்லை என மேற்குலக ராஜதந்திரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

அரச படைகள் தமிழ் மக்கள் மீதும், புலிகள் மீதும் வலிந்த தாக்குதலை நடத்த கூடாது எனவும் அப்படி நடத்தினால் நிலமை மோசமடையும் எனவும் அகாசியிடம் விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை நீண்ட கால இனப் பிரச்சினையை தீர்ப்பதற்குரிய எந்த தீர்வுத்திட்டமும் அரசிடம் இல்லை எனவும் மேற்குலக ராஜந்திரிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

## பாடசாலைகளுக்கு இடையிலான பெரு உள்ளக விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக் கிடையிலான பெரு உள்ளக விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

15,17,19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டி திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் - 24,25ஆம் திகதிகளிலும், 19 வயது ஆண், பெண்களுக்கான உடற் பயிற்சிப் போட்டி 26,27ஆம் திகதியும், 15,17 வயதுப் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி 27ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

சதுரங்கப்போட்டி யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் 29ஆம் திகதியும், 15,19 வயதுப் பிரிவு ஆண்களுக்கு 30ஆம் திகதியும், 15,19வயதுப் பிரிவு பெண்களுக்கு நடைபெறவுள்ள இந்தப் போட்டிகள் யாவும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. இந்தப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை, போட்டி உபகரணங்கள் என்பனவற்றுடன் உரிய நேரத்துக்கு வருகை தரும்படி போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# மானிய விலையில் உரம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம் —

உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானிய விலையில் உரத்தை வழங்குவதற்கு யாழ். கமநல சேவைத்திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன்படி 5 ஏக்கருக்குக் குறைவான தோட்டக் காணியுள்ள ஒருவருக்கு 350 ரூபாவுக்கு ஒரு அந்தர் யூரியா உரம் விநியோகிக்கப்படவுள்ளது. யாழ். மாவட்டத்தில் ஒரு அந்தர் யூரியா உரத்தின் விலை 2 ஆயிரத்து 16 ரூபாவாகும்.

கமநல சேவை நிலையங்கள் மூலமாகவே மானிய விலையில் யூரியா உரத்தை விநியோகிப்பதற்கு கமநலசேவை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை காணி இடாப்புக்களைப் பரிசீலனை செய்யும் நடவடிக்கைகள் தற்போது கமநலசேவை நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திருக்கோவில் பிரதேசத்தை நேற்று சூறாவளி தாக்கியது!

## 150 வீடுகள் சேதம்

அம்பாறை ——

அம்பாறை அக்கறைப்பற்று திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று சூறாவளி தாக்கியது. இதில் பெருமளவான உடமைகளுக்கு சேதம் ஏற்பட்டது. மாலை 5.30மணிக்கு திருக்கோவிலை தாக்கிய சூறாவளி சுமார் 15 நிமிடங்கள் கோரத்தாண்டவம் ஆடியது. இதில் 150வீடுகள் சேதமுற்றிருக்கின்றன.

திருக்கோவில் கல்லியம்தீவு நலன்புரி நிலையம் முற்றாக சேதமாகி இருக்கின்றது. அதில் தங்கியிருந்த 20 குடும்பங்கள் இடம்பெயர்ந்து குமர வித்தியாலயத்தில் தங்கியுள்ளன.

தம்பிலுவில் 2ஆம் குறுக்குத் தெருவில் 25வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

திருக்கோவில் 3ஆம் குறிச்சியில் 50வீடுகள் சேதமுற்றிருக்கின்றன.

ஜெரிட்டா நிறுவனம் இலங்கை ரயில் கூட்டுத்தாபன கம்பனிகளால் நிறுவப்பட்டு கையளிக்கப்பட்ட 50 வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

திருக்கோவில் மெதடிஸ்த மிசன் வித்தியாலய மேல்மாடிக் கூரை வீதிகள் என்பன பெரும்பாதிப்பு அடைந்திருக்கின்றன.

மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்புக்கள் பற்றி உடனடியாக தெரியவரவில்லை.

## ஆயுதக் குழுவுக்கு அரசு...

அரசாங்கத் தூதுக்குழுவினர் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இதன்போது - தற்போது தோன்றியுள்ள பதற்ற நிலைமைகள் குறித்து ரிச்சர்ட் பௌச்சர் தமது அரசாங்கத்தின் கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் என்று ரிச்சர்ட் பௌச்சர் வலியுறுத்தியுள்ளார்.

துணை ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளே நிலைமையை மோசமடையச்செய்துவருவதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் அண்மையில் குற்றம்சாட்டியிருந்தது.

துணை ஆயுதக் குழுக்கள் குறிப்பாக கருணா குழு அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் செயற்பட்டுவருவதாகவும், அவர்களுக்கு அரச படைகள் உதவியளித்துவருவதாகவும், அவை தொடர்பான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் கண்காணிப்புக்குழு தெரிவித்திருந்தது.

இந்த விடயம் குறித்து ரிச்சர்ட் பௌச்சர், அரசாங்கத் தரப்பினரிடம் வினவியதாகவும் வழமைபோலவே அரச தரப்பு - தமக்கும் துணை ஆயுதக்குழுக்களுக்கும் தொடர்புகள் இல்லை என்று மறுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு சர்வதேச நிதி உதவிகள் வழங்கப்படுவதற்கு வேண்டிய கட்டமைப்பு ஒன்றை விடுதலைப் புலிகளுடன் இணைந்து உருவாக்காதமை குறித்தும் ரிச்சர்ட் பௌச்சர் தமது விசனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

## ஐரோப்பிய தடை முயற்சி...

ஐரோப் பிய ஒன்றியத்தின் உத்தேசத் தடையானது அமைதி முயற்சிகளின் தேக்க நிலைக்கான நிஜநாயகரான மகிந்த ராஜபக்ஷவின் அரச பயங்கரவாதத்துக்கு காண்பிக்கப்படும் அனுதாபம் போல காணப்படுகின்றது. இந்த நீதியானது அணுகுமுறை அல்ல. ஒரு பக்கச்சார்பானது.

தமிழ் மக்கள் அரச படையினரின் படுகொலைகளாலும், விமானக் குண்டு வீச்சுக்களாலும் அவலப்பட்டு, அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழர் தாயகத்தில் நிலவும் கள நிலவரத்தை கருத்தில் கொள்ளாது முடிவெடுக்க தலைப்பட்டதிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் மீதான நம்பிக்கையில் பங்கம் ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளை தடைசெய்வதின் மூலம் அவர்களை பேச்சு மேசைக்கு வரவழைக்கலாம் என்ற நோக்குடன் மேற்கொள்ளப்படும் முயற்சி முற்று முழுதாக பொருத்தமில்லாதது.

இதற்கு விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் அடிபணியுமா என்பது எனக்குப் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச சமூகத்திடமிருந்து விடுதலைப் புலிகளை தனிமைப் படுத்தும் இந்த முயற்சியானது அமைதிப் பேச்சுக்களிலிருந்து விலகியிருப்பதற்கு ஏதுவான நடவடிக்கையாக அமையலாம்.

விடுதலைப் புலிகள் மீதான இந்த உத்தேச தடையானது அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஐரோப்பிய ஒன்றியம் காண்பித்துள்ள சமச்சீரற்ற அணுகுமுறையாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழகம்...

புவனவதி மோகன் (வயது40), நவமணி(வயது65) ராதுஷா(வயது14) ,கோவிந்தசாமி (வயது75), ஆகியோரே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கந்தசாமி, பாலமுரளி, ஜனகன்,யோகன்,அரவிந்த் உட்பட 9 பேர் இந்தச் சம்பவத்தில் மீட்கப்பட்டு இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும் காணாமல் போன 5 பேரும் உயிரிழந்திருக்கலாம் என்று இந்திய கடலோரக் காவற்படையினர் தெரிவித்தனர்.

தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்
யாழ்.நகரில்
மொபிற்றல் G.S.M காட் - 350/=
மொபிற்றல் G.S.M காட் - 1000/=
என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7310
[C/5331]

வெளிவந்துவிட்டது
GENERAL INFORMATION TECHNOLOGY SERIES - 1
க.பொ.த. உயர்தர தகவல் தொழில்நுட்ப பாடத்திற்குரியது.
மற்றும் க.பொ.த. சாதாரணதர ICT இற்குரியது.
ஆசிரியர் : நா.அம்பிகைபாகன் B.Sc. Dip.in Ed.
[2276]
கிடைக்குமிடங்கள்
MICT College பொற்பதி வீதி, கொக்குவில்.
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்.
சிறிலங்கா புத்தகசாலை.
பூபாலசிங்கம் புத்தகசாலை.
சிறி சுப்பிரமணியம் புத்தகசாலை.
மற்றும் பிரபல்யமான புத்தகசாலைகளில்

## உள்ளூராட்சி...

எல்பிட்டிய பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| தே.பிக்.முன் | 12954 | 4579% | 8 |
| ஐ.தே.க | 10398 | 36.43% | 5 |
| ஜே.வி.பி | 5031 | 17.78 % | 2 |
| செல்லுபடியான வாக்குகள் | | 28293 | |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | | 30186 | |
| நிராகரிக்கப்பட்டவை | | 1893 | |
| மொத்த வாக்குகள் | | 46346 | |

### கொழும்பு மாவட்டம்

சீதாவாக்கபுர நகர சபை

| | | | |
|---|---|---|---|
| ஐ.தே.க | 5286 | 45.78% | 6 |
| ஐ.ம.சு.மு | 5099 | 44.16% | 4 |
| ஜே.வி.பி | 923 | 07.99% | 1 |
| சுயேட்சை 1 | 4 | 0.03% | 0 |
| மே.ம.மு | 234 | 2.03% | 0 |
| செல்லுபடியான வாக்குகள் | | 11546 | |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | | 12079 | |
| நிராகரிக்கப்பட்டவை | | 533 | |
| மொத்த வாக்குகள் | | 16155 | |

### கண்டி மாவட்டம்

வத்தேகம நகரசபை

| | | | |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 2183 | 55.97% | 6 |
| ஐ.தே.க | 1621 | 41.56% | 3 |
| செல்லுபடியான வாக்குகள் | | 3900 | |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | | 4077 | |
| நிராகரிக்கப்பட்டவை | | 177 | |
| மொத்த வாக்குகள் | | 5935 | |

பாதஹேவாகெட்ட பிரதேசசபை

| | | | |
|---|---|---|---|
| ஐ.தே.க | 20882 | 60.39% | 14 |
| ஹெ.உறுமய | 10739 | 31.06% | 6 |
| ஜே.வி.பி | 2957 | 8.55% | 2 |
| செல்லுபடியான வாக்குகள் | | 34578 | |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | | 37818 | |
| நிராகரிக்கப்பட்டவை | | 3240 | |
| மொத்த வாக்குகள் | | 61006 | |

கம்பளை நகரசபை

| | | | |
|---|---|---|---|
| ஐ.தே.க | 8548 | 57.91% | 9 |
| ஹெ.உறுமய | 5492 | 37.20% | 5 |
| ஜே.வி.பி | 722 | 4.89% | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | | 14762 | |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | | 15667 | |
| நிராகரிக்கப்பட்டவை | | 905 | |
| மொத்த வாக்குகள் | | 25475 | |

### குருநாகல் மாவட்டம்

கொபகேன பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| ஐ.தே.க | 6437 | 44.65% | 5 |
| ஐ.ம.சு.மு | 3090 | 21.43% | 2 |
| லிபரல் கட்சி | 249 | 1.73% | 2 |
| செல்லுபடியான வாக்குகள் | | 14418 | |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | | 15142 | |
| நிராகரிக்கப்பட்டவை | | 724 | |
| மொத்த வாக்குகள் | | 24785 | |

### மட்டக்களப்பு மாவட்டம்

கொறளைப்பற்று மேற்கு பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 5248 | 57.04% | 6 |
| சுயேட்சை 5 | 3759 | 40.85% | 3 |
| சுயேட்சை 4 | 1 | 0.01% | 0 |
| சுயேட்சை 2 | 4 | 0.04% | 0 |
| சுயேட்சை 3 | 5 | 0.05% | 0 |
| சுயேட்சை 1 | 28 | 0.30% | 0 |
| தமிழரசு கட்சி | 156 | 1.70% | 0 |
| செல்லுபடியான வாக்குகள் | | 9201 | |
| பதிவுசெய்யப்பட்ட வரக்குகள் | | 9803 | |
| நிராகரிக்கப்பட்டவை | | 602 | |
| மொத்த வாக்குகள் | | 17653 | |

### இரத்தினபுரி மாவட்டம்

பலாங்கொட பிரதேசசபை

| | | | |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு | 12535 | 54.82% | 11 |
| ஐ.தே.க | 7459 | 32.62% | 6 |
| ஹெ.உறுமய | 906 | 3.96% | 1 |
| ஜே.வி.பி | 1435 | 6.28% | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | | 22864 | |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | | 24235 | |
| நிராகரிக்கப்பட்டவை | | 1371 | |
| மொத்த வாக்குகள் | | 39528 | |

### அம்பாறை மாவட்டம்

நாவிதன்வெளி பிரதேச சபை

| | | | |
|---|---|---|---|
| தமிழரசு கட்சி | 5779 | 62.44% | 5 |
| முஸ்லிம் காங். | 2645 | 28.58% | 2 |
| சுயேட்சை 1 | 3 | 0.03% | 0 |
| ஈ.பி.டி.பி | 32 | 0.04% | 0 |
| சுயேட்சை 3 | 5 | 0.35% | 0 |
| ஐ.தே.க | 207 | 2.24% | 0 |
| ஐ.ம.சு.மு | 589 | 6.36% | 0 |
| செல்லுபடியான வாக்குகள் | | 9255 | |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | | 9568 | |
| நிராகரிக்கப்பட்டவை | | 313 | |
| மொத்த வாக்குகள் | | 12374 | |

# புலிகள் மீது இணைத்தலைமை அழுத்தம் கொடுக்கவேண்டும்!

## ஜப்பானில் மங்கள சமரவீர தெரிவிப்பு

ரோக்கியோ ——

விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடச் செய்வதற்குவேண்டிய அழுத்தங்களை இணைத்தலைமை நாடுகள் பிரயோகிக்கவேண்டும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கோரியுள்ளார்.

இந்துமாதம் 30 ஆம் திகதி ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் தொடர்பாக ஜப்பானிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ரோக்கியோ சென்றுள்ள அமைச்சர் மங்கள சமரவீர நேற்றுமுன்தினம் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனானைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இதன்போது இலங்கையின் அமைதி முயற்சிகளில் தற்போதைய நிலை குறித்து அறிக்கை ஒன்றையும் ஐ.நா. செயலாளரிடம் மங்கள சமரவீர கையளித்திருந்தார்.

இந்தச் சந்திப்புக் குறித்து அவர் செய்தியாளர்களுக்கு விளக்கமளிக்கையில் :-

இலங்கையின் அமைதி முயற்சிகளுககு ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் ஆதரவளிக்கு மென கொபி அனான் தன்னிடம் உறுதியளித்ததாகக் குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்போது தோன்றியுள்ள அமைதியற்ற நிலையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்றும் - அதற்கு சர்வதேச சமூகம் குறிப்பாக இணைத்தலைமை நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அல்லைப்பிட்டி கிராமத்தி...

மக்கள் அங்குள்ள பில்ப்ஸ் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்தனர்.

தீவகத்தில் தாம் வாழ்வதற்கு பாதுகாப்பு இல்லாதிருப்பதினால் தம்மை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதனை அடுத்து யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவினர், அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் நிறுவனம், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ் ஆகியோர் அல்லைப்பிட்டிக்கு சென்று அங்கிருந்த 97 குடும்பங்களை 15 லொறிகளில் ஏற்றி பாதுகாப்பான பிரதேசத்துக்கு அனுப்பினர்.

இவர்களில் 45 குடும்பத்தினர் நாவாந்துறை சென் நிக்கலஸ் தேவாலயத்திலும் யாழ். அடைக்கலமாதா கோவிலில் 52குடும்பங்களும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 23குடும்பங்களைச் சேர்ந்த 120பேர் நேற்று மாலை வன்னிக்கு சென்றுள்ளனர் என்றும் இவர்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் அழைத்துச் சென்று தற்காலிக முகாம்களில் தங்கவைத்துள்ளதாக கிளிநொச்சித் தகவல்கள் தெரிவித்தன.

## கடல் கண்...

குழுவினர் சமர்பித்துள்ளனர்.

கண்காணிப்புக் குழுவின் கடல் கண்காணிப்பு குறித்த புதிய நிபந்தனைகள் தொடர்பாக அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது என்றும், விடுதலைப் புலிகள் இது குறித்து வெளியிடும் பிரதிபலிப்பை அடுத்து அதற்கமைய அரசும் தனது பிரதிபலிப்பை வெளியிடும் என்று அரசு தரப்பு அமைச்சர் கெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கண்காணிப்புக் குழுவினரின் புதிய நிபந்தனைகளால் கடல் கண்காணிப்பில் ஈடுபடும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நடைமுறை அம்சங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, கடல் கண்காணிப்புக் குழுவினர் சமர்ப்பித்துள்ள கடல் கண்காணிப்பு குறித்த நிபந்தனைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளும் ஆராய்ந்து வருவதாக தெரியவருகிறது.

## நாகர்கோவில்...

8 மணியளவில் நாகர்கோவில் பகுதியில் உள்ள முன்னரங்க நிலைப்பகுதியில் படையினர் மீண்டும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இதன் காரணமாக முகமாலை சோதனைச் சாவடியும் தற்காலிகமாக மூடப்பட்டு பின்னர் திறக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் குறித்து தகவல் வெளியிட்டிருக்கும் படைத்தரப்பு- தம்மீது புலிகள் ஆர்.பி.ஜி, மோட்டார் மற்றும் சிறு ஆயுதங்கள் மூலம் தாக்கியதாகவும் - எனினும் தமக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐரோப்பிய...

நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தடை காரணமாக விடுதலைப் புலிகள் கெரில்லா யுத்தத்தில் ஈடுபட்டால் கொழும்பிலுள்ள உல்லாசப்பிரயாணக் கேந்திரங்களும், வெளிநாட்டு முதலீடுகளும் பாதிக்கப்படக் கூடும் என உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்துள்ளார்.

மரண அறிவித்தல்

சுப்பையா சொக்கநாதன்

(உரிமையாளர், நாதன் அன் பிரதர்ஸ், கொழும்பு - 2)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட, நாதன் அன் பிரதர்ஸ் உரிமையாளர் சுப்பையா சொக்கநாதன் 20-05-2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - செல்லம்மாளின் அன்புப் புதல்வனும், புஸ்பவல்லியின் அன்புக் கணவரும், கேதீஸ்வரன் (லண்டன்), பிரபாகரன் (நாதன் அன் பிரதர்ஸ், கொழும்பு), சுதர்மதி, சுதாகரன் (பிரான்ஸ்), புவனேசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஓங்காரகுமரன் (இலங்கை மின்சாரசபை), உஷாந்தினி (லண்டன்), மாநினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிசதுர்ஜனின் அன்புப் பேரனும், தெட்சணாமூர்த்தி (இளைப்பாறிய அசிரியர், யாழ்ப்பாணம்), திவாகரமூர்த்தி, தில்லையம்பலம் (கனடா), இராசேந்திரம் (கனடா), இராசௌந்தரி (கனடா), சௌபாக்கியலட்சுமி, பாலசுந்தரம் (பாலா கென்ஸ்ரக்ஷன் கம்பனி), ஸ்ரீராமச்சந்திரன் (நாதன் அன் பிரதர்ஸ் சுன்னாகம்), சிவசுப்பிரமணியம் (அமெரிக்கா), விக்னேஸ்வரன் (நோர்வே), சண்முகராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக பம்பலப்பிட்டி இல்லத்தில் வைக்கப்பட்டு, பின்னர் 22-05-2006 திங்கட்கிழமை காலை 10 மணி முதல் பொரளை ஜெயவர்த்தன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, மாலை 4 மணிக்கு கனத்தை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.20, ஆதர்ஸ் பிளேஸ்,
கொழும்பு - 4.
தொ. இல:- 011 2508320
(சி/5336)

தகவல்
சொ.பிரபாகரன் (மகன்)
நாதன் அன் பிரதர்ஸ்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.